<u>நாட்டின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்காக அரச சேவையில் ஈடுபடும் பட்டதாரிகள் மற்றும் அரச சேவையில் ஈடுபடாத ஏனைய பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I (அ) தரத்திற்கு ஆட்சேர்த்தல் -2026</u>

மேற்கூறிய ஆட்சேர்ப்புக்குரியதாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களுக்கு அமைவாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2026.05.24 ஆம் திகதியுடையதாக நடாத்தப்பட்ட எழுத்து மூலப் போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைகளுக்குத் தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரர்களின் பெயர் விபரப் பட்டியல்கள், விண்ணப்பதாரரின் நிலையான வதிவிட முகவரிக்குரிய மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு, விண்ணப்பதாரர்களால் கோரப்பட்ட மொழி மூலத்திற்கமைய, தனித்தனிப் பட்டியல்களாக இவ் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஊடாகவும் அத்துடன் ஒவ்வொரு மாகாண அரச சேவை ஆணைக்குழுக்கள் / மாகாணக் கல்வி அமைச்சுக்களின் இணையத்தளங்கள் ஊடாகவும் 2026.10.14 ஆம் திகதி முதல் காட்சிப்படுத்தப்பட்டன. அக் குறிப்பிட்ட பட்டியலின் பிரகாரம் நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்குத் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்காகப் பின்வரும் விசேட அறிவித்தல்கள் வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1. ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதி/நேரம் மற்றும் இடம் ஆகியவற்றைக் காட்டும் பட்டியல் இவ் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் "**பட்டதாரி ஆசிரியர் ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை அட்டவணை - 2026**" எனும் தலைப்பில் வெளியிடப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களின் பெயர்கள், தாம் விண்ணப்பத்தில் குறிப்பிட்ட தங்களது நிலையான வதிவிட மாகாணத்துடன் தொடர்புடைய வகையில், கோரப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களுக்கு அமைவாக மற்றும் பரீட்சைக்கு விண்ணப்பிக்கப்பட்ட மொழி மூலத்திற்கு ஏற்ப வரிசையாகக் காட்டப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை இலக்கம் / பரீட்சை இலக்கம் ஆகியவற்றைப் பயன்படுத்தி அக் குறிப்பிட்ட பட்டியல்களுக்கு அமைவாக நேர்முகப் பரீட்சைத் தகவல்களைப் பரிசோதித்துக்கொள்ள முடியும்.

2. அனைத்து விண்ணப்பதாரர்களும் தமது பெயர் உள்ள பட்டியல்களைப் பதிவிறக்கம் செய்யும் போது அதனுடன் இணைத்துக் காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் அடங்கிய G3 அறிவுறுத்தல் பட்டியலையும் பதிவிறக்கம் செய்து, அக் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நேர்முகப் பரீட்சைக்காகச் சமூகமளிக்கும் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும் என்பதுடன், அதனுடன் காட்டப்பட்டுள்ள பின்வரும் ஆவணங்களையும் பதிவிறக்கம் செய்து வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாகச் செயற்படுதல் வேண்டும்;

   F2 – முழுமையாக அங்கவீனமுற்ற நிலைமையை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவப் பரிசோதனை அறிக்கை (முழுமையான அங்கவீனமுற்ற வகுதியின் கீழ் விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் இது பொருந்தும்)

   இம் மருத்துவப் பரிசோதனை மாதிரிப் படிவத்திற்கு அமைவாக அரசாங்க வைத்தியசாலையொன்றின் வைத்தியர் / சபை மூலம் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அக் குறிப்பிட்ட விண்ணப்பதாரர்கள் செல்ல வேண்டிய வைத்தியசாலை எதிர்காலத்தில் விண்ணப்பதாரரைத் தொடர்புகொண்டு அறிவிக்கப்படும் என்பதுடன், அக் குறிப்பிட்ட திகதியிலும் நேரத்திலும் அறிவிக்கப்பட்டவாறு விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட வைத்தியசாலைக்குச் சென்று

பெற்றுக்கொள்ளும் அறிக்கையை நேர்முகப் பரீட்சை சபையிடம் குறிப்பிட்ட திகதியில் விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட வைத்தியசாலைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

F3 - பொலிஸ் நன்னடத்தை அறிக்கையைக் கோருவதற்கான கடிதம் (இக் கடிதம் அரச சேவையில் ஈடுபடாத பட்டதாரிகள் என்ற அடிப்படையில் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே பொருந்தும்.)
அவ் விண்ணப்பதாரர்கள் தமக்கு அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு இக் கடிதம் மூலமான கோரிக்கையுடன் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைச் சமர்ப்பித்து, கைரேகைகளைப் பொலிஸ் நிலையத்திற்கு வழங்கி, பொலிஸ் நன்னடத்தை அறிக்கையைக் கோருதல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது அரச சேவையில் ஈடுபடாதவர்களுக்குரிய அனைத்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களும் இச் சான்றிதழை நேர்முகப் பரீட்சை சபையினரிடம் சமர்ப்பித்தல் கட்டாயமானது என்பதால், 2026.11.07 வரையான காலப் பகுதிக்குள் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்திற்கு இக் கோரிக்கையைச் சமர்ப்பிக்க விண்ணப்பதாரர் பொறுப்புடன் செயற்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கமைய சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தினால் இச் சான்றிதழ்கள் 2026.11.07 ஆம் திகதிக்குப் பின்னர் அமையும் திகதியிலிருந்து நேர்முகப் பரீட்சைக்குச் சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக விண்ணப்பதாரருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும். (இது தொடர்பாக ஏற்கனவே பொலிஸ் மாஅதிபர் அவர்களினால் பொலிஸ் நிலையங்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.)

F4 - சேவையை உறுதிப்படுத்தும் கடிதம் - அரச சேவையில் ஈடுபடும் பட்டதாரிகளுக்கு மாத்திரமே பொருந்தும். இலக்கம் 2474/18 மற்றும் 2026.02.02 வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அரச சேவையில் ஈடுபடும் பட்டதாரிகளாக விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் இச் சான்றிதழைத் தங்களது நிறுவனத் தலைவர் ஊடாகப் பூர்த்தி செய்து நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும். (அரச சேவையில் ஈடுபடாத ஏனைய பட்டதாரிகள் என்ற அடிப்படையில் விண்ணப்பித்துள்ள அரச சேவையில் ஈடுபடும் பட்டதாரிகளாக இருப்பின் அவர்களும் மேலே குறிப்பிடப்பட்ட F3 அறிக்கைகளுடன் மேலதிகமாக இF4 மாதிரிப் படிவத்தின் பிரகாரம் சேவையை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் நேர்முகப் பரீட்சைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. நேர்முகப் பரீட்சைகளுக்காகத் தகுதி பெற்றவர்களின் பெயர் விபரப்பட்டியலாக இவ் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் 2026.10.14 இல் வெளியிடப்பட்ட பெயர் விபரப்பட்டியலில் தங்களது பெயருக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துப் பாடங்களுக்கும் விண்ணப்பதாரர் தகுதி பெற்றுள்ளமையால்;
   A. அதில் தகுதி பெற்ற ஒவ்வொரு பாட இலக்கத்துடன்;

      P- எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் தாங்கள் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் அப் பாடத்திற்கான வெற்றிடங்களுக்கும்,

      N- எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் தாங்கள் தேசிய பாடசாலைகளில் நிலவும் அப் பாடத்திற்கான வெற்றிடங்களுக்கும்,

      NP- எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் தாங்கள் தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் அப் பாடத்திற்கான வெற்றிடங்களுக்கும் தகுதி பெற்றுள்ளீர்கள் எனக் கருதி நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்கும் போது சம்பந்தப்பட்ட வர்த்தமானி

அறிவித்தல்களுக்கு அமைவாக நேர்முகப் பரீட்சை சபையினரால் தங்களைச் செய்முறைப் பரீட்சைக்குத் தெரிவு செய்வாராயின் சம்பந்தப்பட்ட சமர்ப்பித்தல்களுக்குத் தயாராக வருகை தருதல் வேண்டும்,

B. அக் குறிப்பிட்ட தகுதி பெற்ற அனைத்துப் பாடங்களுக்கும் பொருந்தக்கூடிய அனைத்துப் பாடசாலை எண்ணிக்கைகளுக்காகக் காட்டப்படும் வெற்றிடப் பாடசாலைகளுக்காக எதிர்காலத்தில் கடிதங்கள் மூலம் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக விருப்பத் தெரிவு வெளிப்படுத்தல்களைச் செய்தல் வேண்டும்;

4. நேர்முகப் பரீட்சைக்காகத் தோற்றுவதற்குத் தகுதி பெற்ற அனைத்துத் தகுதி பெற்றவர்களுக்கும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தங்களது நிலையான வதிவிட முகவரிக்கு **நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் 2026.11.01 ஆம் திகதி முதல் தபால் மூலமாகவும் அனுப்பிவைக்கப்படுவதுடன்**, அக் குறிப்பிட்ட கடிதம் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நேர்முகப் பரீட்சைகளுக்காகத் தயாராக சமூகமளிப்பது கட்டாயமானதாகும்;

5. நேர்முகப் பரீட்சைக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள G3 அறிவுறுத்தல்கள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களையும் நேர்முகப் பரீட்சை சந்தர்ப்பத்திலேயே நேர்முகப் பரீட்சை சபையினரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், பிந்தைய சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

6. மேலும், இப் போட்டிப் பரீட்சை 2023 ஆம் ஆண்டில் நடாத்துவதற்காக இலக்கம் 2317 மற்றும் 2023.01.27 ஆம் திகதியுடைய வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு; ''மாகாணப் பாடசாலை'' அல்லது ''தேசிய பாடசாலை'' ஆகிய இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பத்திற்கு மேலாகவும் தொடர்ந்து ''மாகாணப் பாடசாலை அல்லது தேசிய பாடசாலை'' என்ற தெரிவு காணப்படுவதன் காரணமாகவும்; மற்றும் ஒரு விண்ணப்பதாரருக்கு அதிகூடிய பாடங்கள் 4 ஐ விண்ணப்பிப்பதற்கு முடியும் என்பதாலும், கிடைத்த சந்தர்ப்பங்களை இழக்கச் செய்யாதவாறும் மற்றும் அக் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டமையினூடாக சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்ட ஏனைய பட்டதாரிகளுக்கும் அக் குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள் கிடைப்பதற்கு ஏதுவாக இப் போட்டிப் பரீட்சைகளுக்காக மீண்டும் விண்ணப்பிப்பவர்களுக்கும் அக் குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள் கிடைப்பதற்கு ஏதுவாக இப் போட்டிப் பரீட்சைகளுக்கான வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்படுவதன் மூலம் இவ் எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையில் அதிகமான புள்ளிகளைப் பெற்றவர்கள் ஒரே பாடத்துடன் தொடர்புடைய வகையில் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்காக நேர்முகப் பரீட்சைத் தகுதி பெற்றுள்ள சந்தர்ப்பங்கள் போன்றே, ஒரே விண்ணப்பதாரர் ஒரே பாடசாலை வகையின் கீழ் பல பாடங்களுக்குத் தகுதி பெறும் சந்தர்ப்பங்கள் பெருமளவில் காணப்படுகின்றன. அதன் காரணமாக எதிர்காலத்தில் இத்தகைய விண்ணப்பதாரர்கள் தகுதி பெறுவாராயின் தெரிவு செய்யப்படும் ஒரு பாடத்திற்கு மட்டும் நியமனம் வழங்கும் போது பூர்த்தியாகாத எஞ்சிய வெற்றிடங்கள் எவை என்பது இக் கட்டத்தில் கோரப்படும் விண்ணப்பதாரர்களுக்கு நியமனங்களை வழங்கியதன் பின்னர் இனங்காணப்பட்டு எதிர்காலக் கட்டங்களில் அவ் வெற்றிடங்களுக்காக எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த அடுத்தடுத்த அதிகமான புள்ளிகளைப் பெற்றுள்ள இக் கட்டத்தில் நியமனம் பெறாத மற்றும் அடுத்ததாகத் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களைக் அழைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நாலக களுவெவ
செயலாளர்